# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 08.04.2026**

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.20611/C/2023**

திரு N. பெருமாள் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 638 182. .. பொது அதிகார அமைப்பு

*************

**இறுதி ஆணை**

*மேற்படி வழக்கானது 06.01.2026 அன்று இவ்வாணையத்தில் நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள வேலூர் கிராம பட்டா எண்.567, சர்வே எண்.485/4 என்ற இடத்தினை (1) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வட்டாட்சியர், (2) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் மண்டல துணை வட்டாட்சியர் (2) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வட்டசார் ஆய்வாளர் மற்றும் மனுதாரர் ஆகியோர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று களஆய்வு மேற்கொண்டு அளந்து அத்துக்காட்டி, மேற்கொள்ளப்பட்ட அறிக்கையினை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு <u>08.04.2026</u> அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி செ. ராதாமணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம் என்பவர் 08.04.2026 அன்று ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, மனுதாரரின் மனுவில் கோரியுள்ள வேலூர் கிராம பட்டா எண்.567, சர்வே எண்.485/4 என்ற இடத்தினை (1) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வட்டாட்சியர், (2) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் மண்டல துணை வட்டாட்சியர் (2) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வட்டசார் ஆய்வாளர் ஆகிய அலுவலர்களின் வாயிலாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், அவ்வாறு களஆய்வு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையினை மனுதாரருக்கு ந.க.எண்.2027/2025/ஆ4 நாள் 06.04.2026 தேதியிட்டு தகவல்களாக அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை இவ்வாணையத்தின் பார்வைக்கும் பொதுத் தகவல்*

*அலுவலர் சமர்ப்பித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.*

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.20611/C/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 638 182.

**<u>வழக்கு எண்.SA.20611/C/2023</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு N. பெருமாள்,
எண்.28, கழக்கு தெரு,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 638 182.

Copy to: File
SNPS / 21.04.2026